தந்திருக்கிறார்கள். அதேபோல, நல்வாழ்வு இல்லங்கள், இருக்கின்ற சேவை நிறுவனங்கள் தொடர்ந்து நடத்துவதற்கு மனு செய்தால் அதையும் இந்த அரசு ஆராய்ந்து அவர்களுக்கும் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்குரிய உரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

35—

வயது வரம்பு தளர்த்துதல்

***38773—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்க் கிராமங்களைப் பிரிக்கும்போது ஏற்கெனவே கிராம நிர்வாகப் பயிற்சி பெற்ற குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு, வயது வரம்பு தாண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு, வயது வரம்பினைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமங்களைப் பிரித்து, புதிய கிராமங்கள் தோற்றுவிக்கும் பணிகள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய கிராமங்கள் தோற்றுவிக்கவோ அல்லது அதற்குத் தேவையான கிராம நிர்வாக அலுவலர் நியமனம் செய்யவோ தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லாததால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வயது வரம்பினைத் தளர்த்துவது என்ற கேள்வி எழவில்லை.

முற்பகல் 10-35

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுக்க கிராமங்களைப் பிரிக்கும்போது, ஆட்கள் தேவைப்படுவார்கள் எனக் கருதி, கிராம நிர்வாகிகள் பயிற்சி

2001 ஜனவரி 23]

வழங்கப்பட்டது. அரசாங்கம் அதற்கான பட்டயமும் வழங்கி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய கிராம அதிகாரிகள் விடுப்பில் செல்லும்போது, கிராம அதிகாரிகள் பயிற்சி முடித்தவர்களுக்கு அந்த விடுப்புப் பணி வழங்கப்பட்டது. சமீபத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால்கூட கிராம அதிகாரிகள் பணிக்குத் தேவைப்படும்போது யாரெல்லாம் பணியாற்றியிருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. இதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு அந்தப் பணி கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் கிராம அதிகாரிகள் விடுப்பில் செல்லும்போது அவர்களுக்கு அந்தப் பணி கொடுப்பதில்லை. வேறு கிராம அதிகாரிகளுக்கு 'சார்ஜ்' என்று சொல்லி பொறுப்பு கொடுத்தார்கள். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிராம அதிகாரிகள் விடுப்பில் செல்லும்போது அங்கே பயிற்சி முடித்தவர்களுக்குப் பணி கொடுப்பதோடு, அவர்களுடைய வயது அதிகமாகிவிட்ட காரணத்தால் அரசாங்கம் வயது வரம்பைத் தளர்த்தி அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இன்னொன்று, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

திரு. சி. வேலாயுதன்: கன்னியாகுமரி மாவட்டம், தாய்த்தமிழகத்தோடு இணைந்த ஒரு மாவட்டம். கேரளத்திற்குச் செல்லும்போது எங்களைப் பார்த்து தமிழர்கள் அல்லது தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் என்று பேசுகிறார்கள். இங்கு வரும்போது அந்தப் பேச்சு இல்லாமல் இருந்தாலும்கூட, அந்த உணர்வோடு எங்களைப் புறக்கணிக்கிறார்களோ என்று அங்குள்ள சில மக்கள் வேதனைப்படக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, இதுமாதிரியான சந்தேகங்கள் எல்லாம் போகக்கூடிய வகையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் இந்த வாய்ப்பு இல்லாமல் இருப்பதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று ஒரு அணுகுமுறை, மற்ற மாவட்டங்களுக்கு என்று ஒரு அணுகுமுறை என்பது உண்மையான தகவல் அல்ல. அடுத்து, வயது வரம்பைத் தளர்த்துவது என்பது

அரசின் கொள்கை முடிவு பற்றிய ஒன்றாகும். இப்போது வயது வரம்பைத் தளர்த்துவது பற்றிய கொள்கை முடிவை அரசு எடுக்கவில்லை. அதற்கும் மேலே ஒன்றை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 14-10-1980 அன்று பணி நீக்கம் செய்யப்பட்ட பகுதி நேர கிராம அலுவலர்கள் 23,010 பேர். அவர்களையெல்லாம் தெருவிலே விட்டுவிடாமல் கருணையே உருவான கலைஞரின் தலைமையிலே உள்ள அரசு, அவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ரூபாய் 250/-ஐ 12,260 பேர்களுக்கு கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், பழைய Village Officers-க்கு பதவித் தகுதிகள் இருக்குமானால், ஏற்கெனவே தகுதி இல்லாமல் பதவியில் மட்டும் பணியாற்றி இருப்பார்களானால் அந்தக் காலியிடத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுதியின் அடிப்படையில் ஏற்கெனவே வேலை பார்த்தவர்தானா என்ற கண்டிஷன் அடிப்படையில் பணிநியமனம் செய்கிறார்கள். ஏற்கெனவே 14-11-1981 அன்று சட்டம் கொண்டு வந்து கிராமப் பணியாளர்கள் 23,010 பேரை பணி நீக்கம் செய்த பிறகு இப்போது Screening test வைத்து, அந்தத் தேதியில் தகுதியுடையவர்கள் மீண்டும் சர்வீஸ் கமிஷன் மூலமாக Village Administrative Officers-களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் எந்த சட்டச் சிக்கலும் இல்லை, யாரும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

36—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாணவர் விடுதி கட்டடம்

***34454—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூரில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?